
## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## 39 ஆம் ஆண்டு விழா
## சிறப்பு மலர்

# உன்
# தேவனாகிய கர்த்தர்
# உன் நடுவில்
# இருக்கிறார்;

செப்பனியா 3:17



இதழ் : 06
மலர் : 16











கடந்த ஆண்டு
நம்மிடையே வந்து
நம்மத்தியிலே
தேவ வார்த்தையை
பகிர்ந்து கொண்ட
தேவ ஊழியர்கள்



# அன்பு சகோதரரிடமிருந்து



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களுக்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

தேவனுடைய பெரிதான கிருபையால் 2015ஆம் வருடத்தின் 11 –வது மாதத்தை காணச்செய்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

கடந்த மாதம் முழுவதும் நமது வாழ்க்கையிலும், சபையின் ஆராதனைகள் ஊழியங்கள், விஷேசித்த கூடுகைகள் எல்லாவற்றிலும் தேவ பிரசன்னம், வழி நடத்துதலும்,இருந்ததற்காய் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதத்தில் சபையின் 39-வது ஆண்டு விழாவை கொண்டாடும்படி தேவன் நமக்கு கிருபை செய்திருக்கிறார், கடந்த வருடம் சபையில் எத்தனையோ காரியங்கள் நிகழ்ந்தாலும், தேவ கிருபையால் சபையில் நம்மை வைத்து சபையின் நிகழ்வுகளை நடத்தி வருகிற அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

இந்த வருடத்திலும் "உன் தேவனாகிய காத்தர் உன் நடுவில் இருக்கிறார்"
(செப் 3:17) என்று சபையை தேவன் உற்சாகப்படுத்துகிறார்.

## தேவனாகிய கர்த்தர் நடுவில் இருக்கிறார்.

ஒளி (அ) வெளிச்சம்: கர்த்தர் நடுவில் இருக்கும் போது, அவரே வெளிச்சமாய் மாறிவிடுகிறார்.

தேவன் ஒளியாயிருக்கிறார் (1 யோ 3:15)நமது சபையில் தேவன் நடுவில் இருக்கும்போது இருள் விலகும், தேவ பிரசன்னம் நிரம்பும், பயம் என்கிற இருள், பிரச்சனை, போராட்டம், வேலை, வியாதி, போன்ற எந்த இருளாக இருந்தாலும், தேவன் நம் நடுவில் இருக்கும் போது தானாய் மறைந்துவிடும். இப்படிபட்ட இருளை நீக்க தேவனால் மாத்திரம் முடியும்.

## ஜீவ அப்பம்.

இயேசு அவர்களை நோக்கி ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் நாசமடையான்,(யோ:6:35) தேவன் நடுவில் இருக்கும்போது, ஜீவ அப்பமாக,பசியை முற்றிலும் போக்குகிறவராய் அமர்ந்திருப்பார் நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்கிறவராய் இருக்கிறார். நம் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான தேவைகள் உண்டு. வேலை குடும்ப சூழல், சரீர சுகம் இப்படியாக, ஆனால் தேவன் நம் நடுவில், சபையின் நடுவில், குடும்பத்தின் நடுவில் இருக்கும் போது எல்லாம் தானாய் சந்திக்கப்படும், நாம் நினைப்பதற்கும், வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாய் கிரியை செய்கிற அவருடைய வல்லமை, நம் தேவைகளை சந்திக்கும் என்பதில், எவ்வித சந்தேகமும் இல்லை.

## நல்ல மேய்ப்பன் :

நானே நல்ல மேய்ப்பன் நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காய் தன் ஜீவனை கொடுக்கிறார் –யோ 10:11. தேவன் நல்ல மேய்ப்பராய் நம் நடுவில் இருக்கிறார். நம்மை வழி நடத்துகிற நல்ல மேய்ப்பனாய் நமது தேவன் இருக்கிறார். பகலிலே மேகம் ஸ்தம்பத்தினாலும், இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினாலும். இஸ்ரவேலை நடத்திய தேவன். அது போல அவர்கள் நடுவில் இருந்து அவர்களை காத்து கொண்டவரும் அவரே, நம்முடைய தேவன் நம் நடுவில் இருக்கும் போது நம்மை சரியாய் வழிநடத்தி செல்லும் மேய்ப்பனாய் இருக்கிறார். அவருடைய சத்தத்தை தினமும் கேட்டு அவர் பின் நாம் நடக்க வேண்டும், நம்மை புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர் களண்டையில் அமர பண்ணுகிறவர் நம் தேவன் என்பதை நினைத்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். இதுவரை நம்மை தொடர்ந்து வந்த சத்துருவுக்கு முன்பாக நமக்கு ஒரு பந்தியை ஆயத்தம் பண்ணி நம்மை புதிய அபிஷேகத்தால் நிரப்புகிறார். நன்மையும் கிருபையும் நம்மை தொடர்ந்து வரும்படி செய்கிறார்.

பிரியமானவர்களே தேவன் நமது நடுவில் இருக்கும் போது இருள் நீங்கும் வெளிச்சமாய், தேவை என்கிற பசியை போக்கும் ஜீவ அப்பமாய், மற்றும் நம்மை சரியாய் வழிநடத்துகிற, நமது சத்துருவின் மேல் ஜெயம் கொடுக்கிற நல்ல மேய்ப்பராய் இருக்கிறார். அதற்காய் தேவனை துதித்த ஸ்தோத்தரியுங்கள், அவருடைய மகிமையை காண முடியும்.

சபையின் 39-வது ஆண்டுவிழாவை காணும் அன்பான ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் செயற்குழுவின் சார்பாகவும், ஊழிய பொருப்பாளர்கள் சார்பாகவும் மற்றும் எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரன் R.ரவிச்சந்திரன்



## ஆண்டு விழா சிறப்பு தேவ செய்தி



# தேவன் உன் நடுவில் இருக்கிறார்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை விசுவாசிகளே, ஊழியர்களே, இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

இந்த 39-வது ஆண்டுவிழாவை கொண்டாடும் நாம் செய்யும் ஆராதனைகள் தேவ நாம மகிமைக்கும், நம் ஆத்மீக வளர்ச்சிக்கும், ஆசீர்வாதங்களுக்கும் அடிப்படையாக அமைய வேண்டும் என்பதே எனது வாஞ்சை.

அந்திரேயா இயேசுவண்டை பலரை அழைத்து வந்தது போல இயேசுவை பற்றி பலரிடம் சொல்லி அவர்களை ஆலயத்திற்கு அழைத்து வரவேண்டும். ஆலயத்திற்கு வரும்போதே நேரத்தோடே அவர் சமூகத்தில் வந்து பய பக்தியுடன் காத்திருக்க வேண்டும். ஆராதனை வேளையிலும், பிரசங்கத்தின் போதும் கர்த்தர் கொடுக்கும் வாக்குதத்தங்களை விசுவாசத்தோடே உரிமை பாராட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். சபையின் வளர்ச்சி என்பது எண்ணிக்கையில் மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியின் வல்லமையிலும், வரங்களிலும், கனிகளிலும், பரிசுத்தத்திலும் காணப்பட வேண்டும். அத்தகைய வளர்ச்சியை கர்த்தர் நமக்கு தந்து வருகிறார். அதற்காக நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தரை துதிக்கிறேன் என்றாலும் நாம் இந்த புதிய ஆண்டிலே மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு சில காரியங்களை கர்த்தர் நமக்கு தந்திருக்கிற வசனத்தின் அடிப்படையில் இச்செய்தியை சமர்ப்பிக்கிறேன். இதை ஜெபத்துடன் வாசித்து பயன் பெறுமாறு அன்புடன் கேட்கிறேன்.

இந்த ஆண்டிலே நமக்கு புது நம்பிக்கையூட்டும், உற்சாகமூட்டும், வார்த்தையை தேவன் தந்திருக்கிறார். " உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்" (செப்பனியா-3:17)

இந்த வார்த்தைகளின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். நம்முடைய ஆண்டவர் எப்போதுமே நம்மோடு இருக்க வேண்டும், உலாவ வேண்டும் என்பதிலே ஆர்வமுள்ளவராய் இருக்கிறார். காரணம் இந்த மனித சமுதாயத்தை தேவன் உருவாக்கினதின் நோக்கமே அவனோடு உலாவ வேண்டும், பேச வேண்டும், அவன் நடுவில் வாசம் பண்ண வேண்டும் என்பதுதான். ஆகவேதான் லேவி-26:12-ல் நான் உங்கள் நடுவில் உலாவி உங்கள் தேவனாயிருப்பேன். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் என்று சொல்கிறார். யாத்-14:19-22 வரை வாசிக்கும்போது இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து வருகிற வழியில் கண் எதிரே சிவந்த சமுத்திரம், பின்னாடி பார்வோனின் சேனை. இதைப் பார்த்த மாத்திரத்தில் கர்த்தர் நம்மை கைவிட்டு விட்டாரோ, விலகிவிட்டாரோ என்று பயந்து ஆத்திரப்பட்டார்கள். ஆனால் 19-ம் வசனம் சொல்கிறது முன்சென்றவர் அவர்களை காக்க பின் செல்கிறார். 20-ம் வசனம் சொல்கிறது இரவு வெளிச்சமாயிற்று. ஆம் பிரியமான தேவ பிள்ளையே அநேக நேரங்களில் உன் வாழ்விலும் இப்படித் தான் புலம்புகிறாயா? பயப்படாதே உன்னை காக்கும் தேவன் உன்பிறகே உன்னை விட்டு விலகாமல், கைவிட-ாமல் வருகிறார் என்பதை விசுவாசி. உன் இருள், அந்தகாரம், காரிருள் எல்லாம் அவர் உன் நடுவிலே இருப்பதால் வெளிச்சமாய் மாறும். **"நம்முடைய தேவன் நம் நடுவில் இருக்கும்போது அவர் செய்கிற காரியங்கள்"** என்ன என்பதையும், **நம்முடைய தேவன் "நம் நடுவில் இருக்க நாம் செய்ய வேண்டிய காரியங்கள்"** என்ன என்பதையும் தொடர்ந்து நாம் பார்ப்போம்.

## நம்முடைய தேவன் நம் நடுவில் இருக்கும்போது அவர் செய்கிற காரியங்கள்:

### 1.கைவிடமாட்டார் (1–இராஜா–6:12)

சாலொமோனிடம் ஆண்டவர் சொல்லுகிற காரியம் இது. நான் உங்கள் நடுவிலே வாசம் பண்ணி உங்களை கைவிடாதிருப்பேன். ஆம் பிரியமான தேவ பிள்ளையே நம்முடைய ஆண்டவர் நம்மை கைவிடமாட்டார். அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று வாக்கு பணணியிருக்கிறாரே. ஆதி–28:15–ல் யாக்கோபுக்கு ஆண்டவர் சொல்லும் பொழுது இவ்விதமாய் சொல்கிறார். நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை. 1சாமு–12:22–ல் உன்னை சொந்த ஜனமாக்கி கொள்ள பிரியமானபடியால் தமது மகத்துவமான நாமத்தினிமித்தம் கைவிடமாட்டார் என்று எழுதப்பட்டிருக்கிறது. உபா–4:31–ல் அவர் இரக்கமுள்ள தேவனாய் இருக்கிறபடியால் உன்னை கைவிடமாட்டார், உன்னை அழிக்கமாட்டார், உன்னை மறக்கமாட்டார் என்று கூறுகிறது. ஆம் பிரியமாணவர்களே எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த ஆகாரையும் அவள் குழந்தையையும் கைவிடாமல் அந்த வனாந்தரத்திலே ஒரு நீருற்றை ஆயத்தம் பண்ணி வைத்த தேவன் இந்த வனாந்திரமாய் இருக்கிற குவைத் தேசத்திலே இந்த புதிய ஆண்டிலே பல நீருற்றுகளை கர்த்தர் உங்களுக்கு ஏற்படுத்தி தந்து உங்களை கைவிடாமல் காப்பாற்றுவராக.

### 2.வெட்கப்பட விடமாட்டார் (யோவே–2:27)

இரண்டாவதாக நம்முடைய ஆண்டவர் சொல்லுகிற காரியம் என்னவென்றால் நான் உன் நடுவில் இருக்கிறவர். ஆகையால் நீ பயப்படாதே, வெட்கப்படுவதில்லை. உன் வெட்கத்திற்கு பதிலாக இரண்டத்தனையான பலனை காண்பாய். நித்திய மகிழ்ச்சியை கர்த்தர் உனக்குத் தருவார். அருமையான தேவ பிள்ளையே உன்னோடு வழக்காடுகிறவர்கள், உன்னை பகைக்கிறவர்கள், உன்னை துன்ப்பபடுத்துகிறவர்கள் வெட்கி, நாணி, கலங்கி போவார்களே ஒழிய நீ வெட்கப்பட்டு போவதில்லை காரணம் கர்த்தரோ பயங்கர பராக்கிரமசாலியாய் உன்னோடு இருக்கிறார். நீ அநேக நேரத்தில் நினைக்கலாம் நான் வருத்தத்தையும், சஞ்சலத்தையும் கண்டு என் நாட்கள் வெட்கமாய் கழியும்படிக்கு நான் இந்த உலகத்தில் ஏன் பிறந்தேன் என்று மனஸ்தாபப்பட்டு கொண்டிருக்கலாம். கர்த்தர் சொல்லுகிறார் நான் உன் நடுவில் இருக்கிறவர். நானே உன் தேவனாகிய கர்த்தர் என் ஜனமாகிய நீ ஒரு போதும் வெட்கப்பட்டு போவதில்லை.

### 3.சமாதானம் தருவார் (யோவா–19:16)

உயிரோடெழுந்த இயேசு தம்முடைய சீஷர்கள் நடுவில் வந்து நின்று அவர்களுக்கு சொன்ன வார்த்தை “சமாதானம்” காரணம் வாழ்க்கையில் சமாதானமின்றி, நிம்மதியின்றி பயந்து போய் வாழ்க்கையின் அர்த்தம் புரியாமல் எல்லாம் முடிந்தது என்று நினைத்து சோர்ந்து போய் இருக்கிறவர்களுக்கு இயேசு சொல்லுகிற வார்த்தைதான் இது. சமாதானம் என்பது மனித வாழ்க்கையில் முக்கியமான ஒன்று. இது இல்லையென்றால் மனிதனுக்கு பயித்தியம் பிடித்துவிடும், தூக்கம் வராது, எது செய்தாலும் அதில் ஒரு திருப்தி அடையமாட்டோம். கோபம் வந்து BP எகிறிவிடும் ஆனால் இயேசு நம் நடுவில் இருந்தால் சமாதானம் நதியாய் பாயும். காரணம் அவர்தான் சமாதான காரணர், சமாதான பிரபு, நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர் உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், அரமனைகளுக்குள்ளே சுகமும் தருகிறவர். உனக்கு நீடித்த நாள்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருக பண்ணுகிறவர். ஆகவே உங்கள் நடுவிலே வைத்து கொள்ளுங்கள் நிறைவான சமாதானத்துடன் வாழுங்கள்.

## நம்முடைய தேவன் நம் நடுவில் இருக்க நாம் செய்யவேண்டியவை

### 1கெம்பீரித்துப் பாடவேண்டும் (சகரியா–2:10,11)

நம்முடைய ஆண்டவர் நம் நடுவில் இருப்பதற்கு முதலாவது நாம் செய்ய வேண்டிய காரியம் அவரைப் பாடவேண்டும். ஆண்டவர் சொல்லும் போது சொல்கிறார் சீயோன் குமாரத்தியே கெம்பீரித்துப் பாடு, இதோ நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன். நம்முடைய ஆண்டவர் பாடல் ஆராதனையிலே பிரியப்படுகிறவர். நாம் பாடும்போது அவர் நம் நடுவில் பிரசன்னமாகி தம்முடைய மகிமையால் நம்மை நிரப்புகிறார். பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட அன்று இராத்திரியிலே தேவனை துதித்து பாடின போது பூமி அதிர்ந்தது, கதவுகள் திறவுண்டது, கட்டுகள் கழன்று போனது, இரட்சிக்கப்படாத சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்பட்டான். பாருங்கள் நம்முடைய ஆண்டவர் பாடல் துதி ஆராதனையின் மூலம் எவ்வளவு பெரிய அற்புதங்களை செய்கிறார். வேதத்தில் அநேகர் பாடல்களை பாடி துதி செய்தபோது அற்புதங்கள் நடந்திருக்கிறது என்பதை கீழே உள்ள வசனத்தை படித்து தியானியுங்கள். இன்றுமுதல் நீங்களும்சபையிலே வரும்போது கெம்பீரித்து பாடுங்கள், வீட்டிலே நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடுங்கள், சமையற்கட்டில் வேலை செய்யும்போதும் பாடி கொண்டே சமையுங்கள் அற்புதத்தை அனுபவிப்பீர்கள். என் வாழ்க்கையில் பெலவீனப்பட்டவர்கள், சாகத்துணிந்தவர்கள் அநேகர் என் வாயிலிருந்து புறப்பட்ட பாடலின் சத்தத்தை கேட்டு அற்புதத்தை அனுபவத்திருக்கிறார்கள் என்பதை சாட்சியாய் சொல்லமுடியும். நீங்களும் பாடுங்கள், வெற்றியை, விடுதலையை சுதந்தரியுங்கள்.

### உங்கள் தியானத்திற்காக சில வேத பகுதிகள்

யாத்–15:1–21, நியா–5:1–3, 1–சாமு–2:1–10, 1–சாமு–18:6,7, 2–சாமு–22:1–50,

1–நாளா–15:19–29, 2–நாளா–20:22, அப்–16:24–26, 1–கொரி–14:15.

### சாட்சியாய் வைராக்கியமாய் வாழவேண்டும் (தானி–3:16–18, 23–25)

இரண்டாவதாக எந்த ஒரு மனிதன் தேவனுக்காக சாட்சியாய், வைராக்கியமாய் வாழ்கிறார்களோ! அவர்கள் நடுவில் வந்து ஆண்டவர் வாசம் பண்ணுகிறார். சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ தேவனுக்காக சாட்சியாய் நின்றார்கள். கண் எதிரே ஏழு மடங்கு சூடாக்கப்பட்ட அக்கினி சூளையைக் கண்டு பயப்படவில்லை. தைரியமாய் விசுவாசத்தில் நின்றார்கள். அக்கினி அவர்களை சேதப்படுத்தாதபடி கர்த்தர் அவர்கள் நடுவில் கடந்து வந்து பாதுகாத்தார். அதுபோல நாமும் தேவனுக்காக சாட்சியாய், வைராக்கியமாய் வாழும்போது எந்த சூழ்நிலையிலும் அவர் நம் நடுவில் வந்து உதவி செய்ய வல்லவர் என்பதை புரிந்து வாழுங்கள். எலியா நம்மை போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் தன்னை சுற்றியுள்ளவர்கள் கர்த்தரே தெய்வம் என்பதை அறிந்துகொள்ள ஆர்வமுடையவனாய், வைராக்கியமுள்ளவனாய், சாட்சியுடையவனாயிருந்தான். ஆகவேதான் "என்னை கேட்டருளும்" என்ற போது அவன் ஜெபத்திற்கு கர்த்தர் உடனே பதில் கொடுத்தார். நீங்களும் தேவனுக்காக வைராக்கியமாய் சாட்சியாய் வாழ்ந்து ஜெபிப்பீர்கள் என்றால் எல்லா ஜெபத்திற்கும் பதிலை பெற்றுக் கொள்வீர்கள். தானியேல் சாட்சியாய், வைராக்கியமாய் வாழ்ந்தான். பவுல் சாட்சியாய் வைராக்கியமாய் வாழ்ந்தான். தீமோத்தேயு சாட்சியாய், வைராக்கியமாய் வாழ்ந்தான். யோவான் சாட்சியாய், வைராக்கியமாய் வாழ்ந்தான், பின்னே ஏன் நம்மால் வாழ முடியாது? முடியும் தேவ பிள்ளையே நீங்களும் வாழ்ந்து காட்டுங்கள் வெற்றியை, விடுதலையை சுதந்தரியுங்கள்.

### உங்கள் தியானத்திற்காக சில வேத பகுதிகள்

எண்ணா–25:11–13, 1–இராஜ–18:22–40, சங்–69:9, அப்–17:16,17,

1–தீமோ–6:12, 1:18, 3–யோவா–3, எபேசி–4:17

### பரிசுத்தமாய் வாழவேண்டும் (யோசு–3:5,10–17)

மூன்றாவதாக நம்முடைய ஆண்டவர் நம் நடுவில் இருப்பதற்கு நாம் செய்ய வேண்டிய காரியம் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைய வேண்டும். யோசுவா இவ்விதமாய் ஜனங்களை உற்சாகபடுத்துகிறான். "இன்றைக்கு உங்களை பரிசுத்தம் பண்ணி கொள்ளுங்கள் நாளைக்கு உங்கள் நடுவிலே அற்புதங்களை செய்வார்" என்று சொல்லுகிறான். ஆம் பரியமானவர்களே அற்புதத்தை பெற வேண்டும் என்றால் பரிசுத்தம் தேவை. காரணம் நம்முடைய ஆண்டவர் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களை செய்கிறவருமாயிருக்கிறார். ஆகவே தான் ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரில் பட்ட மாத்திரத்தில் கரை புரண்டு ஓடின

யோர்தான் இரண்டாக பிரிந்து சகல ஜனங்களும் யோர்தானை கடந்து தீருமளவும் உலர்ந்த தரையாய் மாறினது. எனக்கண்பான சகோதரா, சகோதரி இப்படிப்பட்ட அற்புதங்களை பெறுவதற்காக தான் கர்த்தர் உங்களை இரட்சித்து, அபிஷேகித்து “அஹமதி தமிழ்த் திருச்சபையில் வைத்திருக்கிறார்.” நம் தேவன் நம் நடுவில் இருந்து அற்புதம் செய்வதற்கு அவர் உங்களிடம் எதிர்பார்ப்பது “பரிசுத்தம்” நீங்கள் கேட்கலாம் எப்படி இந்த மாய பாவ உலகத்தில் பரிசுத்தமாய் வாழ்வது என்று. நான் ஒன்றை உங்களுக்கு சொல்லுகிறேன். உப்பு சுவை நிறைந்த கடல் நீரில்தான் மீன் வாழ்கிறது, அந்தத் தண்ணீரை குடிக்கிறது, சுவாசிக்கிறது ஆனால் அந்த மீனை எடுத்து பார்த்தால் உப்பின் சுவை அதில் துளி அளவும் இருக்காது. அது தன்னை அந்த உப்பு தொடத படி காத்துக் கொண்டது போல நாமும் இந்த உலக வாழ்வில் பாவம், உலகம், மாமிசஇச்சை மற்றும் எந்தவிதமான துர்க்குணமான காரியங்களும் அனுகாதபடி காத்துக்கொள்வோம். பவுல் சொல்கிறார் தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். அந்த பரிசுத்தத்தில் வாழ்வோம். பரமனை தரிசிப்போம், பரலோக இராஜ்ஜியம் சுதந்தரிப்போம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து இந்த புதிய ஆண்டிலே வழி நடத்துவராக ஆமென்




கர்த்தரின் பணியில்

தேவ ஊழியன்

**ஜெபசுந்தர்.**

**தக்கலை ,கன்னியாகுமரி – தமிழ்நாடு**

**இந்தியா**

91-9865138041, 9445148041


## புதிய ஆண்டு புதிய பிரதிஷ்டை

கர்த்தருடைய மாபெரும் கிருபையால் 39-ம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் அஹமதித் திருச்சபை இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தில் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். இந்த வருடமும் இருக்கட்டும் என்று தேவன் நமக்கு தயவாய் ஒவ்வொரு ஆண்டையும் கூட்டித்தருகிறார். கடந்த ஆண்டிலே நாம் நம்முடைய விசுவாச ஓட்டத்தை எப்படி ஓடினோம் என்பதை சிந்தித்துப் பார்க்க அழைக்கப்பட்டிருக்கின்றோம். தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள் தான் எத்தனை ஆனால் நாம் அவருக்காக என்ன செய்தோம் என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது. “கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது” என்று பிலி-2:5-ல் பவுல் கூறியுள்ளார். இந்த புதிய ஆண்டிலே நாமெல்லாரும் இந்த கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக்கொள்ளும்போது வி”சுவாசத்திலும் அன்பிலும் சமாதானத்திலும் ஒருமனப்பாட்டிலும் அபிஷேகத்திலும் பெருகுகிறவர்களாய் காணப்படுவோம் . பியமானவர்களே காலம் சமீபமாயிற்று. நாம் அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருந்து பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றவர்களாய் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை நம்மை விட்டு அகற்றுவோம். நம்முடைய ஜெப வாழ்வைப் புதுப்பிப்போம். நம்மையே பரிசுத்த ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து சாட்சியாய் வாழ்வோம். இந்த புதிய ஆண்டிலும் இத்தகைய புதிய பிரதிஷ்டைக்குள் தேவன் நம் ஒவ்வொருவரையும் நடத்துவாராக. “ சந்தோஷப்பட்டுக் களிகூறுங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்” என்று வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். கடந்த ஆண்டு முழுவதும் கைவிட-ாமல் நம்மைப் பாதுகாத்த தேவன் இந்த ஆண்டிலும் நம்மை ஏந்துவார் தாங்குவார் சுமப்பார் தப்புவிப்பார் என்பது நிச்சயம். அல்லேலூயா.


சகோதரி. **பிரியா பிரேம்குமார்**

## 39-வது வருட ஆண்டு விழா வாழ்த்து

39-வது ஆண்டு விழா காணும்
எனது இனிய அகமதித் தமிழ் திருச்சபையே
39- பழைய ஆகமங்களையும் போதித்து
ஒரு தாய் தேற்றுவது போல் என்னைத் தேற்றியும்
39-வது சங்கீத்தில் சொன்னபடி நடக்கச் சொல்லிய
எனது தாயான அகமதித் தமிழ் திருச்சபையே.
நீர் யோபின் 39 ஆசீர்வாதங்களையும் பெற்று
நீடூழி வாழ்க வாழ்கவென மனமாற வாழ்த்தி வணங்குகிறேன்.

அன்புடன்

சகோ. சுகுமார்

அகமதை மகிழ்விக்கும்
அஹமதி தமிழ்த் திருச்சபையே
அயராது நல்வழிகளை போதிக்கும் பணிமனையே
அல்லல்கள் யாவும் தீர்க்கும் இன்ப எழில் இல்லமே
ஆண்டு விழா காணும் உன்னை
உளமாற வாழ்த்துகிறேன்

பாசம், பரிவு, நேசம் என்றும் கொடுத்திட்டாய்
கருணை, இரக்கம், தயவு யாவும் ஈந்திட்டாய்
நீதி, நேர்மை, ஒழுக்க பாதை நடத்திட்டாய்
கிருபை, ஈவு, வரங்கள் ஆசி தந்திட்டாய்

தொடரட்டும் உன் பணிகள் உலகம் உள்ளளவும்
வளரட்டும் உன் புகழ் வானம் உள்ளளவும்
நேசக் கர்த்தரின் மனவாட்டியாய்
என்றும் நிலைத்திருந்து
வாழ்க வளர்க என சிரம் தாழ்த்தி
போற்றுகின்றேன்.

அன்பன்

சகோ. செபாஸ்டியன்

## நிறைவற்ற ஆயுட்காலம்

அஹமதி தமிழ்த் திருச்சபையே!!

நிறைவுற்ற முப்பத்து ஒன்பது ஆண்டுகளை
நினைத்து நான் பார்க்கையில் ஆனந்த கண்ணீர் சுரக்கிறது
நீயின்றி என்னால் வாழ்ந்திருக்க முடியாது
நீயில்லா இத்தேசத்தை என்னால் நினைத்து பார்க்கவும் இயலாது

நிலைவாழ்வு பெற்றிடும் வழியை எமக்கு போதித்து
நிலை நின்று பலகாலம் நீ பணி செய்தல் வேண்டும்
நிற்க பெலனின்று தடுக்கி விழுவோர் வாழ்க்கையில்
நிழலாக நீ வந்து தேற்றி அணைத்திட வேண்டும்

நலிந்து உலக கவலைகளால் கலங்கி நான் நிற்கையில்
நேசக்கரம் கொண்டு தாயாக நீ அரவணைத்தாய்
நீதி நியாயம் கிடைக்காமல் தவியாய் நான் தவிக்கையில்
நீயாக முன் வந்து மன அமைதி கிடைக்க செய்தாய்

நிதமும் வறுமையில் வாடி நான் நின்றபோதும்
நின் அருள் கரத்தால் என்னை செல்வந்தனாய் மாற்றினாய்
நீங்காத பாவ சுமை சுமந்து உன்னிடம் வருகையில்
நேசக்கரம் கொண்டு அணைத்து இந்த நீசனையும் வாழவைத்தாய்

நீங்கா புகழோடு வாழ்க அஹமதி தமிழ்த் திருச்சபை
நிகரில்லா உன் மகிமை தழைக்கும் புவி உள்ளவரை
நீ வழங்கும் அருள் ஆசிகள் என்றுமே எமக்கு
நிறைவற்ற ஆயுட்காலம் என்றென்றுமே உனக்கு

அன்புடன்

சகோ. ஸ்டாலின்

## Love Remains

Happiness grows as each year passes
And trials test the love that will grow.

Pleasures of the heart remain a treasure,
Perhaps a memory of some time ago.

Yesterday's joys are your heart's treasure
And love remains to guard the store.

Now and then we are reminded,
It is love (the key) that unlocks the door.

Vivid are the scenes of days gone by,
Each thought, a page from the past,

Reminding us that God guides our path and
Yielding to His will, our love will last.

Bro. Robert

## வாசம் வீசுங்க...
## விசுவாசமாயிருங்க.

அனைத்திடும் அன்பராம் அஹமதியில்
ஆளுகையின் ஆண்டுகள் அஹமதியில்
இருள் இல்லா அஹமதியில்
ஈர்ப்பாய் ஈர்த்திடும் அஹமதியில்
ஊழியமாய் ஊன்றுகோலாய் அஹமதியில்
எழும்பி பிரகாசிக்கும் எண்ணங்களாய் அஹமதியில்
ஏசுவின் ஏக்கங்களாய் அஹமதியில்
ஐயமில்லா ஐக்கிய வாழ்வாய் அஹமதியில்
ஒருமனமாய் ஒற்றுமையாய் அஹமதியில்
ஓடி ஓடி ஓயாது உம்பணி நடந்திடும் அஹமதியில்
ஔஷதமாய் ஆணிவேராய் அஹமதியில்

ஃஆவியானவரின் ஆளுகை செய்யும்
திருச்சபையாம் அஹமதி திருச்சபையாம்
ஆண்டுகள் முடியவில்லை .

ஆரம்பம் ஆரம்பம் ஆரம்பம் அஹமதியில்
ஆண்டுகளும் முப்பத்தொண்பது முன்பாம்
பாலை நிலமாம் ஆனால்
பாலும் தேனும் ஓடுகிற குவைத்தில்
பாங்காய் நிற்கும் தமிழ்த் திருச்சபை
தமிழர்களுக்கு தாயாம்..

பரலோகில் பன்னிரண்டு முத்துக்கள்
ஜொலிக்குதாம் ஆனால்
பாரினில் 39 (3+9=12) ஆண்டுகள்
அலங்காரமாய் அஹமதியில் ஜொலிக்குதாம்
நகரத்தின் வாசல் சுத்த பசும்பொன்னாம்
ஜொலிக்குதாம் ஆனால்

அஹமதியின் நகரில் தேவனுடைய வார்த்தை
சுத்த பசும்பொன்னாய் ஜொலிக்குதாம்
சபையின் அஸ்திபாரம் இயேசுவாம் ஆகையால்
இருள் விலகி ஜொலித்திடும் சுத்த ஜோதியாம்
ஓடி வாங்க துன்பம் ஒழிந்ததுமே
இன்பமடையலாம் தூயவரின் சமூகத்தில்
துதிபாடி கொண்டாடலாம்

பக்தர்கள் கூட்டத்தில் சேர்ந்து
பரமபிதாவிற்கு பணிவிடை செய்யலாம்
திசைமாறிய நாட்கள் போதுமே
கால தாமதம் வேண்டாம் கருத்தாய் பாடி கொண்டாடிட
தமிழ் தாய் சபை அழைக்கிறது ஆனந்தம் கொள்ளலாம்
ஆசீர் பெறலாம் வாங்க வந்து வாழ்த்துகங்க
வாசம் வீசுங்க.. விசவாசமாயிருங்க .
சபையே நீவூழி வான் உயர வாழ உன்னில் மைந்தன் இயேசு
மகிழ்ந்திட மனம் மாற மாண்பு மாந்தரில் பிறந்திட மகிழ்விக்கும்
உன்னில் மலர் தூவி உன் ஆண்டுகள் பெருகிட சேவை தொடர்ந்திட
கலங்கரை விளக்காய் ஒளி வீசிட ஜெபிக்கின்றோம் சிந்தை ஊற்றி..

அன்புடன்

**ஆ.எபினேசர் குடும்பம்**

## மன்னிக்கமறந்தாயே மகனே(ளே)

சொந்தங்களுடன் கருத்து வேறுபாடு
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்
நண்பர்களுடன் கருத்து வேறுபாடு
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்
அண்டை வீட்டாருடன் பிரச்சனை
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்
உறவினர்களுடன் கருத்துவேறுபாடு
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்
விசுவாசிகளுடன் பிரச்சனை
வைராக்கியமாய் பேசாதிருந்தேன்

ஆனாலும் வேதத்தை ஒழுங்காக தியானித்தேன், அனுதினம் அல்லும் பகலும் வேதம் வாசித்தேன், உபவாசம் மேற்கொண்டேன், தசமபாகம் கொடுத்தேன், ஆவிக்குரிய போதகரிடம் ஆவிக்குரிய காரியங்களை சம்பாஷித்தேன்

கொஞ்சகாலத்தில் மரணம் என்னை சந்தித்தது பரலோகம் செல்வேன் என்று நம்பிக்கையோடு சென்றேன், தேவதூதர்கள் ஜீவபுஸ்தகத்தை புரட்டி உன் பெயர் இல்லை என்றனர், ஏன் இந்த நிலைமை என்று கதறினேன், மன்னிக்க மறந்தாயே மகளே(னே) என்று ஆண்டவர் சொன்னார்

வைராக்கியம் வீணாய் போனது, சிந்தியுங்கள் வைராக்கியம் மறந்து எல்லோரையும் மன்னித்து விடுங்கள் ஏனென்றால் ஏழு எழுபது முறை மன்னிக்க வேண்டும் என்று கர்த்தர் சொல்கிறார்

**மறப்போம் மன்னிப்போம்**

கிறிஸ்துவின் பணியில்

அன்பு சகோதரன்

**TRUE LIFE CENTRE**

(Reg. No. 1415 of 2008)

3G Mission Office, 7/3 Meyyappan 1st Street,
Arappalayam, Madurai – 625 016

Rev. D. BENHER STEPHEN
Director

*Making Life Meaningful*

+91 94865 05865
+91 9150 123438

**"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக".**

ரூத் 2:12

கிறிஸ்துவுக்குள் என் அன்பான அகமதி தமிழ் திருச்சபையின் விசுவாசிகளே!

39வது ஆண்டு நிறைவை மகிழ்ச்சியோடு கொண்டாடும் என் அன்பு திருச்சபை விசுவாசிகளுக்கு நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக பல கடினமான சூழ்நிலைகளிலும் கர்த்தரோடு உள்ள உறவை பெலப்படுத்தவும், அவரை ஆராதிக்கவும், அவருடைய மந்தையில் அநேகரை சேர்க்கவேண்டுமென்ற ஊழியபாரத்தோடும், ஊழியங்களை தாங்கவும் உங்கள் நேரத்தை செலவிடவும், தாலந்தையும் பொருட்களையும் உற்சாகத்தோடு கொடுக்கும் உங்களை கர்த்தர்தாமே உயர்த்துவாராக. கர்த்தரின் விருப்பத்தை நிறைவேற்றும், அவரை உண்மையாய் பின்பற்றும் உங்களுக்காக நான் கர்த்தரை துதிக்கிறேன்.

**"பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சியான ஒரே இடம் உள்ளது. அது கர்த்தரின் விருப்பப்படி செய்வதினால் செல்லும் இடம்."**

– டேவிட் லிவிங்ஸ்டன்.

ஏழையாகப் பிறந்து அவரது சித்தப்படி செய்ததால் அரசர்கள் பெறும் உயர்ந்த இடத்திற்கு சென்றவர் டேவிட் லிவிங்ஸ்டன். உண்மையாய் அவரை பின்பற்றும் ஒவ்வெருவரையும் கர்த்தர் நினைக்கிறார் என்பதற்கு அவர் ஒரு எடுத்துக்காட்டு.

"இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்" என பேதுரு கேட்டபோது இயேசு "என் நாமத்தினிமித்தம் வீடடையாவது, சகோதரரையாவது, சகே–ாதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" (மத்தேயு 19:29) என வாக்குகொடுத்திருக்கிறார்.

எஸ்தருடைய வாழ்வில் அது நிறைவேறியிருக்கிறது. புறஜாதி பெண்ணாக இருந்தபோதும், அவரது உறுதியான பின்பற்றுதலினால் நல்ல மகிழ்ச்சியான வாழ்வும், இயேசுவின் வம்சாவழியை ஏற்படுத்தும் வாய்ப்பையும் பெற்றுக்கொண்டார்.



அப்படியே கர்த்தர் உங்களையும் நிறைவான பலனினால் திருப்தியாக்குவாராக!

ஜெபத்துடனும், அன்புடனும்

அன்பரின் பணியில்

**அருள்திரு. டே. பென்ஹர் ஸ்டீபன்.**

மெய்வாழ்வு மையம்

**PRAISE EVANGELICAL CHURCH**
No.2/632, Gowri Nagar, Mugalivakkam, Chennai - 600 125.
Email :joshsteve777@yahoo.com, Mobile :09840196826

Pastor K.Joshua Stephen

Date : 1/11/2015

கிறிஸ்துவுக்குள் அன்பான அஹமதி தமிழ் திருச்சபையார் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறித்துவின் நாமத்தில் 39 வது ஆண்டின் வாழ்த்துக்களை கூறி கொள்வதில் பெருமகிழச்சி அடைகிறேன்.

கடந்த 38 ஆண்டுகள் ஆண்டவர் உங்களையும், உங்கள் ஊழியத்தையும் சிறப்பாக நடத்தி வந்தமைக்கு கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன். உபாகமம் 26:15 ; நீர் உமது பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருந்து நோக்கிப் பார்த்து, உமது ஜனங்களாகிய இஸ்ரவேலரையும், நீர் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே, எங்களுக்குக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்தையும் ஆசீர்வதியும் என்று சொல்வாயாக:என்ற இவ்வசனத்தின்படி ஆண்டவர் செய்த கிரியைகளை நினைத்து கர்த்தர் நமது பிதாக்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தை நினைத்தும், நீங்கள் வாழுகிற இந்த தேசத்திற்காகவும் இவர்களுடைய இரட்சிப்புக்காகவும் நமக்கு(உங்களுக்கு) இந்த தேசத்தில் கொடுத்திருக்கிற பாதுகாப்பு மற்றும் நமது தேவனை துதிப்பதற்காக கொடுத்திருக்கிற சுதந்திரத்திற்காகவும் கர்த்தரை துதித்து கர்த்தருடைய நாமத்தை பிரஸ்தாபம் பண்ண ஆண்டவர் உங்களுக்கு கிருபை அளிப்பாராக.

மேலும் எசேக் 34:26– நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும். என்ற மேற்கண்ட வசனத்தின் படி இனிவரும் ஆண்டுகளில் இவ் ஊழியமும், நீங்களும், உங்கள் பிள்ளைகளும் இந்த ஆசீர்வாத மழையில் இன்னும் செழிப்பாக வளர்ந்து, படர்ந்து அநேக ஊழியங்களுக்கும் ,ஊழியர்களுக்கும் ஆசீர்வாதமாய் இருக்க வாழ்த்துகிறேன்.

அனைவருக்கும் எங்கள் குடும்பம் மற்றும் ஊழியத்தின் சார்பாக வாழ்த்துக்களை கூறி முடிக்கிறேன். ஆண்டவர் உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக !



இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்

(பாஸ்டர் K. ஜோஸ்வா ஸ்டீபன்)

## Christian Forgiving

It's hard to live a Christian life
In Satan's world of sin and strife.
You try your best to help a friend,
Then find that, somehow, you offend.
Sometimes you never even know
What happened to upset him so;
And though you try with all your might,
You cannot seem to set things right.
For Satan's working every hour
To find the sheep he may devour.
He'll broadcast lies within your heart,
To drive your brothers far apart.
Then he can pick off one by one,
And when his evil work is done;
We're at his mercy, on our own,
But we can never stand alone.
We need each other in this fight,
To stand against his awesome might.
His wicked lies we must not heed,
But, on the Holy Spirit, feed.
If you've a problem with a brother,
Do not discuss it with another;
We cannot read our brother's mind;
He may not know he's been unkind.
If, in your heart, you hold a grudge,
And you refuse to let it budge,
It festers 'til you're filled with hate;
Forgive, before it is too late.

Lavanya vinoth

## My Lord Is Always Near

As troubles and trials start to appear,
And life is filled with pain,
When there's such wickedness to fear,
And faith begins to wane;
It seems I hear my Saviour say,
"There is no need to fret.
I'm here beside you all the way;
I've never left you yet."
Great peace and calm, within me, steal,
That's hard to understand.
It's then, that I can almost feel
The touch of my Master's hand,
So gently leading and guiding me on;
Helping me through each test.
I know He'll never leave me alone:
This puts my mind at rest.
The cares of life just seem to fade,
With my Saviour by my side.
My mind, on Him, is always stayed;
I, in His love, abide.
For sin and suffering to cease,
My heart, within me, yearns.
The Kingdom of God will bring us peace,
When our blessed Lord returns

Praveen Isaacdurai

## வியாதியிலிருந்து பெற்ற விடுதலை

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக
இச்செய்தி மலரின் வாயிலாக, நான் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த ஜீலை மாதத்தில் அதிக வயிற்று வலியில் நான் கஷ்டப்பட்டேன். வைத்தியர்களிடம் சென்று சோதனை செய்ததில் என் கர்ப்பபை அதிக வீக்கத்துடன் இரத்தக் கசிவு இருப்பதாகவும் அதை அறுவை சிகிச்சை மூலம் எடுக்கவும் கூறினர். கடந்த 4 ஆண்டுகளாக வேதனைப்பட்ட எனக்கு என்னுடைய போதகரின் உதவியால் மதுரையில் ஒரு நல்ல கிறிஸ்தவ மருத்துவமனையில் எனக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது. இதற்கு முன்பு என் சரீரத்தில் அநேக ஆபத்தான நிகழ்வுகள் நடந்திருந்த போதிலும் தேவனுடைய கரம் இதிலும் என் ஜீவனை மீட்டுக் கொடுத்தார் அதற்காக என் இயேசுவை நான் ஸ்தோத்தரிக்கிறேன். கண்ணீரின் பாதை, பண பற்றாக்குறை, சரீர வேதனை பாடுகளின் மத்தியிலும் அவருடைய சிலுவை அன்பை எனக்கு உணரச்செய்தார். யாக்கோபு என்னும் பூச்சியே நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று வாக்குத்தத்தத்தின் மூலமாக என்னை ஆற்றித் தேற்றினார். மனிதர்கள் உற்றார் உறவினர்கள் யாவரும் நம்மை கைவிடலாம் ஆனால் தேவன் நம்மை ஒரு நாளும் கைவிடமாட்டார். வாக்குத்தத்தம் பண்ணினவர் வாக்கு மாறாதவராகவே இன்றும் நம்மில் ஜீவிக்கிறார். அவரை மாத்திரம் நம் வாழ்வில் பற்றிக்கொண்டு ஜெயம் பெறுவோமாக.

வியாதிப்படுக்கையிலிருக்கின்ற அநேக ஆத்துமாக்களுக்காக நாம் தேவனிடம் மன்றாடுவோம். பணம் சம்பாதிப்பது மாத்திரம் நம் குறிக்கோள் அல்ல. தேவனுடைய அன்பே விலையேறப்பெற்றது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஐக்கியத்தோடு நாம் வாழ்வோம். இந்த ஒரே ஒரு வாழ்வில் ஆண்டவருக்காக ஏதாவது செய்ய நாம் முயற்சி செய்வோம். தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

அன்புள்ள சகோதரி.
**பியூலா பால் ஜெகநாதன்**

## அன்பான சபை

அஹமதி தமிழ்த் திருச்சபை
ஆண்டுகள் கடந்தாய் 39
மகிமையின் தேவனை
பரிசுத்தமுள்ள தேவனை
பாவத்தை மன்னிப்பவரை
கிருபை பொருந்தினவரை
சிலுவையில் மரித்தவரை
இரத்தம் சிந்தி மீட்டவரை
உயிரோடு எழுந்தவரை
வாக்கு மாறாதவரை
அன்புள்ள தேவனை
அதிசயம் செய்தவரை
ஆலோசனை கர்த்தரை
ஆராதனைக் குரியவரை
பாடவும் வணங்கவும்
வார்த்தைகளை கேட்கவும்
கிருபை செய்தாய் இத்தேசத்திலே
அஹமதி தமிழ்த் திருச்சபையே
ஆண்டுகள் பல காண வாழ்த்தும்

**டெய்சி எபினேசர்**

## கர்த்தர் நம்சபையின் நடுவில் இருக்கிறார்

அராரத் மலைக்கு அழகு வந்தது
நோவாவின் பேழை நின்றதால்

மோரியா மலைக்கு அழகு வந்தது
ஈசாக்கை பலியிட சென்றதால்

ஓரேப் மலைக்கு எழில் வந்தது
தண்ணீர் புறப்பட்டு வந்ததால்

சினாய் மலைக்கு சிறப்பு வந்தது
தேவனின் கட்டளை கிடைத்ததால்

கிலேயாத் மலைக்கு கம்பீரம் வந்தது
கிதியோன் போரிட்டு வென்றதால்

கல்வாரி மலை எல்லாருக்கும் காட்சியானது
இயேசுவின் இரத்தம் பாய்ந்தோடியதால்

அஹமதி தமிழ் திருச்சபைக்கு ஏழுப்புதல் வந்தது
தேவனாகிய கர்த்தர் நம் நடுவில் இருப்பதால்

40ஆவது அகவைக்கு அடியெடுத்து வைக்கும்
எங்கள் சபையே தேவனின் வருகையில்
எடுத்து கொள்ளப்பட

சபையின் "வாலிபர் குழு வாழ்த்துகிறோம்"

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்
**அற்புதராஜ்**

## LOVE: THE GREATEST GIFT

The gifts of faith, and hope, and love
Come from our Father up above,
But I am sure we can agree;
Love is the greatest of the three.
For love is kind, it suffers long,
And does not treat it's neighbor wrong.
No arrogance in love, you'll find.
No selfish thoughts come into mind.
Love is not envious with lusts;
Does not, in worldly riches, trust.
Love is not rude, does not offend;
Does not think evil of a friend.
True love believes and bears all things;
Fulfillment of God's law, it brings,
In truth, rejoicing every day;
In hope, which is the only way.
Our knowledge will all pass away,
But love endures; It's here to stay.
Let's strive to be like God above,
For this we know: Our God is love.

Jannet Jayasekar

**2015 ஆம் ஆண்டு**
**சபையின் வாக்குத்தத்தம்**

**..நீங்கள் சொல்லுகிறபடியே**
**சேனைகளின் தேவனாகிய கர்த்தர்**
**உங்களோடே இருப்பார்..**

**ஆமோஸ் 5:14**

## WE WORSHIP TOGEATHER

We come from North
We come from South
We come from all over
We come to cheer you and
to thank you on this special day

We welcome you this Joyful day
Greetings to convey
Oh! Happy day
Oh! Happy day
It's our church Anniversary day

Lord We know it's not our own,
Not of our flesh,
Not of our bones,
Still Father, Let
This day may be
The sign of our Love.

-Amen

## நன்றி

உதவிக்கு வெகுமதி நன்றி
உப்பாகிலும் நீமதி சிந்தி
குறள் பல கூறும் இன்நன்றி
இதை போற்றினால் வாழ்வதில் நிம்மதி
சிறு நன்றி பெரிதென்று மனதில் பதி
உனை உயர்த்திடும் ஜெகமதில் உன் மதி
வாலாட்டும் நன்றிக்காய் ஐந்தருவி ஜீவி
பகுத்தறிவு உள்ளவன் நீ இதை மதி
நன்றி மறந்தாரை பிரிந்தே விலகிரு
செய் நன்றி கொண்டாரை சேர்ந்தே இரு
செய் நன்றி கொன்றாரை மனதால் வெறு
உன்னுளம் உவக்க மற்றாற்கு உதவிடு
பலன் பார்த்து கைகோர்பதை விட்டிடு
உயிரிருக்கும் வரை நன்றியால் நிலைத்திரு
உனக்கு உயிர் கொடுத்த ஆண்டவரை
உள்ளவும் நினைத்திடு
நம்மை அறவனைத்து நடத்தி வந்த
அஹமதி தமிழ் திருச்சபையை வாழ்த்திடு
உலகம் மதிக்கும் மாந்தர் என
பேர் நீ பெற்று வாழ்ந்திரு

அன்பரின் பணியில்

சகோ. ஜெயசேகர்

# மணவாட்டி நீ

உன்!
அன்பின் கரத்தை என்னிடம் நீட்டி –என்
உள்ளத்தை உள்ளபடி காட்டி
தேவ மன்னாவை அன்பாய் ஊட்டி –என்
ஆன்மாவை அனுதினமும் தீட்டி
எமை இயேசுவின் வருகையில்
இணைக்கும் மணவாட்டி நீ!
மன்னன் இயேசு வரும்வரை வாழ்க!
அநேக ஆத்துமாக்கள் சூழ...

கர்த்தர் கிருபையில்
ஆரோக்கியதாஸ் & குடும்பம்

## Christ, Our King

God sent His Son to earth, to give
His life for us, that we might live;
He shed His precious blood that we,
Might rule with Him eternally.
He cleansed our hearts and minds from sin,
His Holy Spirit, He placed within;
To lead us in His righteous ways,
That we may serve Him all our days.
In those who serve Him, God takes pleasure,
They will become His special treasure;
His own elect, our God will spare,
On eagle's wings, these He will bear.
So we must strive with all our might,
To be accepted in His sight;
We must be found among the wise,
With faith in God, not Satan's lies!
When Christ returns, as King of kings,
He'll bring us peace, restore all things;
No secrets will be kept concealed,
For then all truth will be revealed.
Then everyone will know the Lord,
And we'll serve Him with one accord;
Both great and small; both old and young,
From every nation, every tongue.

Shalom Jaysekar

## My Lord Is Always Near

As troubles and trials start to appear,
And life is filled with pain,
When there's such wickedness to fear,
And faith begins to wane;
It seems I hear my Saviour say,
"There is no need to fret.
I'm here beside you all the way;
I've never left you yet."
Great peace and calm, within me, steal,
That's hard to understand.
It's then, that I can almost feel
The touch of my Master's hand,
So gently leading and guiding me on;
Helping me through each test.
I know He'll never leave me alone:
This puts my mind at rest.
The cares of life just seem to fade,
With my Saviour by my side.
My mind, on Him, is always stayed;
I, in His love, abide.
For sin and suffering to cease,
My heart, within me, yearns.
The Kingdom of God will bring us peace,
When our blessed Lord returns.

Bro. Mano

## என் தேவன்

சுழல்காற்றில் அடிபட்டதுபோல பிரச்சனைகளால் சுழப்பட்டு
கலங்கிய இருதயத்துடன் கர்த்தரின் பாதத்தில் அமர்ந்தேன்
"பயப்படாதே! உன்னை கண்ணின் மணியைபோல
காத்திடுவேன" என்றார்.
சொந்த குடும்பத்தில் அன்னியளாக மாறிய வேளையில்
மனம் நொந்து கர்த்தரின் பாதத்தில் அமர்ந்தேன்
"உன் தகப்பனும் தாயும் உன்னை மறந்தாலும்
நான் உன்னை மறப்பதில்லை" என்றார்.
நான் நேசிக்கிறவர்களால் சிறுமைப்படுத்தப்பட்டு குற்றம்சாட்டப்பட்ட வேளையில்
உள்ளம் உடைந்து கர்த்தரின் பாதத்தில் அமர்ந்தேன்
"பயப்படாதே! விசுவாசமுள்ளவளாயிரு அப்பொழுது அவர்கள்
இரட்சிக்கப்படுவார்கள் " என்றார்.
இப்பொழுது உணர்ந்தேன் என்னுடைய பிரச்சனைகள்
எவ்வளவு பெரிதாக இருந்தாலும் என் பாவங்களை,
சோகங்களை, பாரங்களை, அவமானங்களை,
வருத்தங்களை சந்தோஷமாக
மாற்ற சிலுவை சுமந்தாரே என் நேசர்

அவர் சர்வவல்லமையுள்ளவர் – எல்ஷடாய்"
சமாதானத்தின் தேவன் – யெகோவா ஷாலோம்
சுகமளிக்கும் தேவன் – யெகோவா ராஃபா
வெற்றி தரும் தேவன் – யெகோவா நிசி.

என் நேசர் எனக்கு போதுமானவர் !
பரலோகம் வரை என்னை நடத்திடுவவார் !
அங்கு சோகமில்லை, துக்கமில்லை,
பாரமில்லை, பயமில்லை, கண்ணீரில்லை !
அல்லேலூயா ! அல்லேலூயா !! அல்லேலூயா !!!

அன்புடன் சகோ. ஐசக்துரை

## விண்ணக நாயகனே

விண்ணக நாயகனே பார் போற்றும் வேந்தனே
வற்றாத அன்போடு புவி நோக்கி வந்தாயோ
உம் சாயலில் உம்மை உயர்த்த மனிதனை படைத்தாயோ
உம்மை மறந்து மனுவானவன் சிருஷ்டியை உயர்த்தினானோ

மண்ணான மனிதன் உம்மை மறந்து வழி விலகி போகையில்
மனதுருகி உம்மை அறிய வாய்ப்பளித்தாயோ
உம் அன்பை உணர இரட்சிப்பை அளித்தாயோ
இரட்சிப்பை பெற விசுவாசம் என்னும் சாவியை அளித்தாயோ

மாயையான மனிதன் அக்கிரமத்தின் மேல் அக்கிரமத்தால் சீர்கெட்டு போகையில்
இரத்தம் சிந்தி பாடுபட்டு கொல்கதா மலையில் உம்மை ஒப்புகொடுத்தாயோ
மனுக்குலத்தின் பாவம் நீங்கி மனுவானவர் ஜெயம் எடுக்க
முட்கீரிடம் சூடிக் கொண்டாயோ

புல்லுக்கு சமானமாய் இருக்கும் மனுக்குலத்தின் பாவக்கறை போக்க
விரும்பாத ரூபத்தை சொல்லொன்னா பாடுகளுடன் அடைந்தாயோ
சத்துருவை நிந்தித்து மனுவானவன் ஜெயமெடுக்க
கைகள் கால்களில் ஆணிகளால் கடாவப்பட்டாயோ
மனம்நொந்து கசிந்துருகி மனுவுக்காய் சகித்தாயோ
என் சிலுவை நாதா ஜெய கிறிஸ்துவே
சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்தீரோ
மூன்றாம் நாளில் உயிர்தெழுந்தீரோ
நீர் மரணத்தை ஜெயித்தீர் என்று இவ்வுலகுக்கு காட்ட
இப்போது உணர்கிறேன் உம் அன்பின் ஆழத்தை
ஒப்புக்கொடுக்கிறேன் முற்றிலுமாய் என்னை, ஜீவநாதா கிறிஸ்தேசுவே

## உப்பு நல்லதுதான்,உப்பு சாரமற்று போனால் எதினால் சாரமாக்கப்படும் (லூக்கா 14:34)

உப்பின் விஷேச பரிபூரண குணங்கள்.

01. உப்பு தன்னை மறைக்காமல் பளிச்சென வெளிபடத்தகிறது. சாட்சிகள்.
02. உப்பு மிகவும் மென்மையாக உள்ளது – பரிசுத்தம்
03. உப்பு சுவை கொடுக்கின்றது – அன்பு
04. உப்பு பொருட்களை பாதுகாக்கின்றது – ஐக்கியம்
05. உப்பு மருந்தாக பயன்படுத்தப்படுகின்றது – விசுவாசம்
06. உப்பு ஆரோக்கியத்தை தருகின்றது.[6] ஜெபம்
07. உப்பு மழுமையாக கறைந்து பயன்தருகிறது. – அர்ப்பணிப்பு

உப்பு சாரமற்று போனால் எதினால் சாரமாக்கப்படும்

உப்பானது தன்னுடைய சாரத்தை எந்த பொருளுக்கும் சரிசமமாக விட்டு கொடுப்பதில்லை. நாமும் கிறிஸ்துவை போல மாதிரியான சாட்சியான வாழ்க்கை வாழ்ந்து அவர் அன்பை சுவைக்காத மக்களை. நம்முடைய பரிசுத்தமான எல்லா செயல்கள் மூலம் கிறிஸ்துவை வெளிபடத்தவோம் இவர் அன்பை சுவிஷேசமாக குறி கடைசிவறை நம்மை அர்பணிப்போம். தினமும் நரகத்திற்கு நேராக சென்று கொண்டிருக்கும். கோடிக்கணக்கான மக்களுக்கு இடைவிடாமல் ஆத்துமபாரம் அகாண்டு ஜெபித்து, அவருடைய கடைசி கட்டளையை விசுவாசத்தோடு வேகமாக நிறைவேற்றுவோம்.

இந்த புதிய ஆண்டில்தாமே வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத ஜனங்களை நம்மோடு ஐக்கியத்தின் மூலம் உழைத்து அவர் மந்தையில் திருச்சபையாக சேர்ப்போம் என்று “அறை கூவல்” விடுப்போம்.

கிறிஸ்துவின் பணியில்

S ஆல்பர்ட்

### இயேசு ராஜாவின் ஆலயம்

தேவனின் ஆலயமே நாமே அதன் ஆலயமே
பரிசுத்த ஆலயமே பரமனின் ஆலயமே
அஹமதி எங்கள் திருச்சபையே
ஆண்டவர் உலா வரும் ஆலயமே
அஹமதி திருச்சபை என்ற ஆலமரத்தில்
ஆணி வேராய் பல ஊழியங்கள்
அழைத்தவர் கொடுத்த அவரவர் வேலைகளை
ஆனந்தமாய் செய்கின்றனர் அவர் பிள்ளைகள்
கர்த்தர் கொடுத்தார் கட்டளைகள் பத்து
காத்து நடந்தால் அவரே நம் சொத்து
மண்ணாலே மனிதனை உருவாக்கினார்
மாராவின் தண்ணீரை மதுரமாக்கினார்
செங்கடலில் வழியைத் திறந்துவைத்தார்
சீறி வரும் கடலை அதட்டி வைத்தார்
நம்பிக்கையுடன் தொட்டாள் அவர் வஸ்த்திரம்
நாழிகையில் நின்றது பெருகிய உதிரம்
அன்னிய தேசத்தில் அன்னிய மொழியை
ஆராதிக்க கொடுத்தார் இந்த திருச்சபையை
ஓடினதோ உன் வயது முப்பத்தெட்டு
ஓயாமல் தொடரவேண்டும் பல நூற்றாண்டு
வாழ்க வளர்க அஹமதித் தமிழ்ச்திருச்சபையே
வள்ளலர் இயேசுவின் வருகை வரும் வரையே

தேவனுக்கே மகிமை

அன்புள்ள சகோதரி.சாந்தி

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே இரட்சகளும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

அகமதி தமிழ் சபியன் 39ம் ஆண்டு நிறைவு விழாவிற்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள். சபையை ஆரம்பித்த பெரியோர்கள், சபை வளர்ச்சிக்காக உழைத்த, பாடுபட்ட, உழைத்து வருகிற ஒவ்வொருவருக்கும் அகமதி சபையின் மூலம் ஆசீர்விதிக்கப்பட்டு உலகம் முழுவதும் வாழ்கின்ற அருமையான யாவர்க்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

தேவ சபை கர்த்தருக்குள் நிலைத்திருக்கவும், சாட்சியாக இருக்கவும் எபேசியர் 5:14–21 உள்ள வசனத்தின்படி சபை அங்கனர்கள் கடைபிடிக்க வேண்டும்.

1. விழித்திருங்கள்
2. ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்துகொள்ளுங்கள்.
3. காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.
4. கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்.
5. ஆவியினால் (பரிசுத்த ஆவியினால்) நிறைந்திருங்கள்
6. சங்கீதங்களினாலும், கீர்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்
7. உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீத்தனம் பண்ணுங்கள்.
8. நம்முடைய கத்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும், எல்லவாற்றுக்காவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.
9. தெய்வ பயத்தோடிருங்கள்
10. ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்

39ம் ஆண்டு விழா கொண்டாடும் அகமதி தமிழ் சபை அங்கத்தினர் யாவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நல்வாழ்த்துக்கள்.

அன்புள்ள
**Ps.ப.அருள் சாமுவேல்**
திருவண்ணாமலை.

## ஏன் மேய்ப்பர் இயேசு

அன்பிற்குரியவர்களே மனிதனுடைய பாவங்களுக்குப் பரிகாரம் உண்டாக பலி செலுத்தி இரத்தம் சிந்தப்பட வேண்டும் என்று வேதங்கள் சொல்லுகின்றன. அந்த பாவ பரிகார பலியாக பூமியில் தோன்றி பரிகாரம் தந்தவர்தான் நம் இயேசு. இறைவன் இயேசு எந்த மனிதனுடைய வேண்டுதல்களையும் கேட்கிற தெய்வமாயிருக்கிறார். எந்த மனிதனையும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பட்சபாதம் பார்க்காதவராய் குற்றமற்றவராயும் குற்றங்களை மன்னிக்கிறவராயும் மாசற்றவராயும் எங்களை மாசற்றவனாய் மாற்றுகிறவராயும், ஒளியானவராயும், எங்கள் அகத்தின் (இருதயத்தின்) இருளை அகற்றுகிறவராயும் பரிசுத்தராயும், எங்கள் பாவத்தை மன்னித்து பரிசுத்தமாக்குகிறவராயும் நீதிபரராகவும், எங்களை நீதிமானாய் மாற்றி "திரைகட்ல ஓடியும் திரவியம் (செல்வத்தை) தேடு" என்ற பழமொழிக்கு ஏற்ப நாங்கள் இரையை (உணவை) தேடி பறந்து போகும் பறவையை போல தாய் நாட்டில் (இந்தியா) இருந்து இந்த அந்நிய தேசத்திற்கு (குவைத்) எங்களை பெயர் சொல்லி அழைத்தீர், அரவணைத்தீர், அன்பு காட்டினீர், கலங்காதே என்று சொல்லி கலங்கரை விளக்காக நீர் வாழும் வாசஸ்தலமாகிய அஹமதி தமிழ்த் திருச்சபையை காட்டி உம் வசனத்தில் எங்களை போஷித்து இம்மட்டும் வழி நடத்தீனீர் 38 ஆண்டுகள் உன் கலங்கரை வெளிச்சத்தில் வாழ்ந்து பல ஊழியங்களை உருவாக்கி பல இடங்களில் ஊழியம் செய்யும்படி ஆசீர்வதித்து சங்:23:1–ல் கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார் . என்ற வசனத்திற்கேற்ப எங்களை ஆசீர்வதித்து 39–வது ஆண்டு விழாவை காணும் பாக்கியத்தையும், ஜீவனையும் தந்த அஹமதித் திருச்சபையே நீ இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து எங்களை போல இரைத் தேடி வரும் பிள்ளைகளை போஷித்து அவர்களுக்கு மேய்ப்பராய் கலங்கரை விளக்காய் ஆண்டாண்டு காலம் நீர் நீடூழி வாழ்க வாழ்க என்று அகம் குளிர வாழ்த்தி வணங்குகி போற்றுகிறேன்

அன்புள்ள
**R.ஸ்டீபன் குடும்பத்தார்**


AHMADI TAMIL CONGREGATION - KUWAIT
39 th ANNIVERSARY 2015

# செயற்குழு மற்றும் ஊழிய பொறுப்பாளர்கள்



தலைவர்
சகோ.ரவிச்சந்திரன்



செயலாளர்
சகோ.ஜெசேகர்



வாலிப ஐக்கியதலைவர்
சகோ.அற்புதராஜ்



பொருளாள்
சகோ.ஆரோக்கியதாஸ்



விதிமுறை கண்காணிப்பாளர்
சகோ.வில்கின்ஸ் தினகரன்



கணக்கு தணிக்கையாளர்
சகோ.அசோக்குமார்



Web site
சகோ.பால் பாண்டியராஜ்



Choir
சகோ.இயேசு ரெத்தினம்



Magazine
சகோ.ஐசக் துரை



Prayer
சகோ.ஸ்டாலின்



Camp ministry
சகோ.சுகுமாரன்



Missionary
சகோ.எபிநேசர்



Orphanage
சகோ.ஆரோக்கிய ராஜ்



Transport
சகோ.வில்சன்



Sunday School
சகோ.டென்சிங்